



Voice of Jagadguru


advaitam paramanandam — an e-magazine on advaita




## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு சங்கராச்சார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரை



மனிதனுடைய அகம்பாவத்துக்கு காரணமான அவனுடைய பணம், பாண்டித்தியம் அல்லது பலம் அவனை கர்வம் கொள்ள செய்கிறது, ஆனால் இந்த மமதை உண்மையில் சத்ரு என்பதை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அது அவனை மிகவும் தொந்தரவு செய்து தவறுகளிளும் ஈடுபட வைக்கிறது.

தன்னை யாரும் எதிர்க்க முடியாது என்று அவன் தவறாக நினைக்கிறான், செய்கிறான். ஆனால் அவனுடைய கெட்ட கர்மாவினால் அவன் கஷ்டங்களை அனுபவிப்பது நிச்சயம். அகம்பாவத்தை கைவிட்டு இருந்தாலே இதையெல்லாம் தவிர்த்து இருக்கமுடியும்.

பகவத்பாத சங்கரர் கூறுகிறார் :-

மனிதன் பணம், யௌவனம், பாண்டித்யத்தின் காரணமாக கர்வப்படக்கூடாது. எல்லாவற்றையும் காலம் எடுத்துச்சென்று விடும். அவை சாஸ்வதமானவையே அல்ல, என்கிறார்..

பகவத் பாதர் போன்ற மஹரிஷிகள் எவ்வளவு அறிவாற்றல் பெற்றிருந்தாலும் துளி கர்வம் கூட இல்லாதவர்கள். அதனால் தான் ஜனங்கள் அவர்களை மஹாபுருஷர்கள் என்று வர்ணித்திருக்கிறார்கள்.

ஆதலால் எக்காரணத்தைக் கொண்டும் அகம்பாவம் கொள்ளாமல் மனிதன், எளிமையுடன் வாழவேண்டும்.

ஒருவனுடைய சத்துருவும் தொண்டையில் முள் மாதிரி குத்துவதும் ஆன இந்த அகங்காரத்தை அழித்து விட்டு தன்னை கட்டுப்படுத்துவதில் உள்ள சுகத்தை வேண்டுமளவு அடைய ஞானத்தை விரும்பி செல்பவன் நிச்சயம் அறிவான்.

-

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸந்தேகம் தெளிதல்

**(பூஜ்யஸ்ரீ ஸ்வாமீ ஓம்காரானந்தர்)**



**கேள்வி :** நமது மதத்தை இந்துமதம் என்று கூறுவது சரியா அல்லது ஸனாதன தர்மம் என்று கூறுவது சரியா? தயவு செய்து விளக்கவும்.

**ஸ்வாமிஜீ :** உலக கலாசார வரலாற்றை ஆராய வேண்டும். ஆராய்ந்தால் ஓர் உண்மை புலப்படும். அஃது இதுவே: செம்மையாக வாழும் வாழ்க்கைமுறை உலகிலேயே முதன் முதலில் பாரத நாட்டில்தான் தோன்றியது. நடுநிலையில் இருந்து உண்மையை ஆராய்பவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் பேருண்மை இதுவே. வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்ற கேள்வியும் உலகில் மெய்ப்பொருள் எது? பொய்ப் பொருள் எது? என்ற கேள்வியும் ஸனாதனமாக இருந்து வருகிறது. (ஸனாதனம் = யாண்டும், எப்பொழுதும்) இதற்கான விடைகளும் ஸனாதனமாக இருந்து வருகின்றன. அது இம்மண்ணின் வாழ்க்கை முறையிலும், நூல்வடிவிலும் ஸனாதனமாக இருந்து வருகிறது. எனவே ஸனாதனமான கேள்விகளுக்கு ஸனாதனமாக விடைதரும் நமது மதம் பிற்காலத்தில் பிறராலும் நம்மவராலும் ஹிந்து மதம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. எனவே இரண்டும் சரி என்பதே விடை.

**கேள்வி :** இறந்த பெற்றோர்களுக்கு செய்யப்படவேண்டிய ஸ்ரார்த்தம் முதலிய கார்யங்களால் பலன் உண்டா ? செய்யத் தவறுவதால் உண்டாகும் விளைவுகள் ஏதோனும் உண்டா?

**ஸ்வாமிஜீ :** விருப்பு வெறுப்புகளுக்கு இடம் தராமல் நாம் வாழ வழிவகுத்துக் கொடுத்தவர்கள் நமது முன்னோர்கள். பெற்றோர்கள் உடல் இவ்வுலகில் இருக்கும் வரையில் போற்றி, வணங்கிப் பாதுகாப்பது பாரத நாட்டு மரபு உடல் நீங்கிய பிறகும் அதற்குரிய ஸ்ராத்தம் முதலிய சடங்குகளைச் செய்வதும் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத வாழ்க்கையைப் பற்றிய பேருண்மைகள் பல உள்ளன. அவற்றை அறிவு பூர்வமாக நம்பியே இவைகளைச் செய்து வருகிறோம். உலகியல் இன்பங்களை நாம் கஷ்டமின்றி அடைவதற்கும், மனத்தூய்மையைப் பெறுவதற்கும் இத்தகைய சடங்குகள் மறைமுகமாக உதவி புரியும். இவைகளைச் செய்யத் தவறினால் மேற்கண்ட நன்மைகளைப் பெற இயலாது போகும்; பண்பாட்டுச் சிதைவுக்கு இதுவும் ஒரு காரணமாகக்கூடும்.
(தொடரும்) நன்றி : வேதநெறி, வெப்: https://www.vedaneri.org/

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய தர்மங்கள்.

1. ஸூர்யனை உதயமாகும்பொழுதும், அஸ்தமிக்கும் பொழுதும், உச்சியிலிருக்கும்பொழுதும், ஜலத்திலும், க்ரஹணத்திலும் பார்க்கக்கூடாது. த்யானம் மட்டுமே நாம் செய்ய வேண்டும்.

2. ப்ராம்மணர், ஸுமங்கலி, தேவாலயம், தேவதை, அச்வத்தமரம், பசு இவைகளை ப்ரதக்ஷிணமாகவே செல்ல வேண்டும். அப்ரதக்ஷிணமாகச் சென்ற திலீபமஹாராஜனுக்கு குழந்தை பிறக்கவில்லை என்று நாம் புராணத்தில் பார்க்கின்றோம்.

3. அக்னியை வாயினால் ஊதக்கூடாது. காலினால் தாண்டக்கூடாது. கையினால் தொடக்கூடாது. பூமியில் வைக்கக்கூடாது. ஜலத்தைக்கொட்டி அணைக்கக்கூடாது. காலை தீயில் காய்ச்சக்கூடாது. அசுத்தமான பொருளைப் போடக்கூடாது. அக்னியோடு அக்னியைச் சேர்க்க கூடாது. இவை யாவும் நாம் தவறாமல் கடைபிடிக்க வேண்டியவை.

4. புண்ய தீர்த்தங்களில் வந்தவுடன் காலை வைக்கலாகாது. முதலில் ஜலத்தை தலையில் ப்ரோக்ஷித்துக் கொண்டு, பிறகு தான் நாம் கால்களை அலம்ப வேண்டும். வஸ்திரமில்லாமல் குளிக்கக்கூடாது. காரி துப்பக்கூடாது. ஜலத்தில் ப்ரக்ஷாளனம் செய்துகொள்ளலாகாது. ஒரு பாத்ரத்தில் ஜலம் எடுத்தே சுத்தம் செய்துகொள்ள வேண்டும். ஜலத்தில் ஜலமல விஸர்ஜனம் செய்யக் கூடாது. குளத்தில் கல்லை போடக்கூடாது. புண்ணிய தீர்த்தத்தில் காலை வைத்த பீமனே துன்புற்றான் என்பது நாம் அறிந்த கதை.

5. தனக்கே என்று பாகம் செய்வது, புஷ்பம்தொடுப்பது, பாயஸம் பக்ஷணம் செய்வதும் பாபமாகும். பகவானுக்கும் விருந்தினருக்கும் செய்து அளித்த பிறகே நாம் புசிக்க வேண்டும்.

6. இரவில் கால் அலம்பி துடைத்துக்கொண்டு பகவானை த்யானம் செய்துவிட்டு பிறகே படுக்கவேண்டும். வடக்கு முகமாய் தலைவைத்தும், முறிந்தகட்டிலிலும் படுக்கக்கூடாது. பாழான வீட்டில் படுக்கக்கூடாது. தூங்கு பவனை எழுப்பலாகாது. பெரியோரை எழுப்புவது மஹா பாபம். இந்திரியங்கள் எல்லாம் மனதில் ஒடுங்கும். அவஸரமாக அரைகுறை தூக்கத்தில் எழுப்பினால் மனதினிடமிருந்து கண் காது முதலியவை அந்தந்த இடத்திற்குப் போகாமல் கண் சக்தி காதிலும், காது சக்தி மூக்கிலும் புகும். இதனால் குருடனாகவும், செவிடனாகவும் ஆகக்கூடும். (தொடரும்....)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# தர்ம சாஸ்திரம் என்றால் என்ன ? அவை எப்பொழுது யாரால் எழுதப்பட்டது ?

**(ப்ரஹ்மஶ்ரீ ராமேஸ்வர அவதானிகளின் ப்ரசிஷ்யர் ப்ரஹ்மஶ்ரீ ராஜீவாக்ஷ கனபாடிகள்)**

வேதோகிலோ தர்ம மூலம் எல்லா தர்மங்களுக்கும் வேதம்தான் வேர் என்று மனு ஸ்மிருதியில் கூறப்பட்டுள்ளது. தர்மம் என்பது வேதத்தால் சொல்லப்பட்டதும், நற்பயனை கொடுக்கக் கூடியதும் ஆகும்.

தர்மங்களை தொகுத்து செய்முறைகளை கட்டளையிடும் நூல்களுக்கு தர்மசாஸ்திரம் எனப் பெயர். வேதம் நான்கு வகைப்படும் - ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம் மற்றும் அதர்வண வேதம். அதில் ரிக் வேதம் 21 சாகைகளை கொண்டது, யஜுர் வேதம் 101 சாகைகளை கொண்டது, சாம வேதம் 1000 சாகைகளை கொண்டது, அதர்வண வேதம் 16 சாகைகளை கொண்டது ஆக மொத்தம் 1138 வேத சாகைகள். இந்த 1138 வேத சாகைகளிலும் தர்மங்களே உபதேசம் செய்யப்படுகின்றன.

மகரிஷிகள் எல்லா வேதசாக்கைகளையும் கற்று அறிந்தவர்கள். இந்த கலியுகத்தில் மனித ஆயுள் குறைவாக இருப்பதால் எல்லா வேதசாகைகளையும் கற்று அறிய சாத்தியமில்லை. ஆகவே மகரிஷிகள் தீர்க்கதரிசிகளாக இருப்பதால் வருங்கால தலைமுறைக்கு எல்லா வேதங்களுடைய சாரமாகவும் சுலபமாக தர்மங்களை தெரிந்து கொள்வதற்காகவும் கடை பிடிப்பதற்காகவும் தர்ம சாஸ்திர நூல்களை எழுதி அனுக்கிரஹம் செய்து உள்ளார்கள். அவைகளுள் 18 ஸ்மிருதிகள் பிரசித்தமானவைகள்.

1) மனு ஸ்ம்ருதி
2) யாஞ்யவல்க்ய ஸ்ம்ருதி
3) பிரகஸ்பதி ஸ்ம்ருதி
4) வசிஷ்ட ஸ்ம்ருதி
5) பராசர ஸ்ம்ருதி
6) வியாச ஸ்ம்ருதி
7) தக்ஷ ஸ்ம்ருதி
8) விஷ்ணு ஸ்மிருதி என்கின்ற (மனு ஸ்மிருதி)
9) நாரத ஸ்ம்ருதி
10) போதாயண ஸ்ம்ருதி
11) ஆபஸ்தம்ப ஸ்ம்ருதி
12) ஆஸ்வலாயண ஸ்ம்ருதி
13) உபமன்யு ஸ்ம்ருதி

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

14) கௌதம ஸ்ம்ருதி
15) லோகாக்ஷி ஸ்ம்ருதி
16) வாதூல ஸ்ம்ருதி
17) சங்க ஸ்ம்ருதி
18) ஹாரீத ஸ்மிருதி மற்றும் இதுபோன்று உபஸ்ம்ருதிகள் 18 ஸ்மிருதிகள் இருக்கின்றன.

மனு முதலியவர்கள் அனைத்து வேத சாகைகளிலும் உள்ள தர்மங்களை அறிந்து தானும் அனுஷ்டித்து அதன் பலனை அடைந்து வருங்கால நம் சந்ததியர்களுக்கும் இந்த தர்மங்களின் பலன்கள் கிடைக்க வேண்டும் என்று ஸ்மிருதி வடிவத்தில் நூல்களாக அமைத்துள்ளார்கள். இந்த தர்ம சாஸ்திரங்களை படித்து புரிந்துகொண்டு அனுஷ்டானம் செய்வதற்கு நமக்கு சிரமமாக இருக்கும் என்று கருதி அதையும் சுலபப்படுத்துவதற்கு பல நிபந்தன கிரந்தங்கள் உருவாக்கப்பட்டன. அவைகளுள்

1) ஹேமாத்ரீ
2) ஸ்மிருதி சந்திரிகா
3) ஸ்மிருதி சந்தர்பம்
4) ஸ்மிருதி ரத்தினம்
5) தர்ம சிந்து
6) நிர்ணய சிந்து
7) பரிமள பாரிஜாதம்
8) த்ரிகாண்ட மண்டனம்
9) ச்ராத்த மயூகம்
10) ஸ்மிருதி முக்தா பலம்
11) அக பஞ்ச சஷ்டி
12) தர்ம சாரம்
13) தர்ம சாகரம்

முதலிய பல கிரந்தங்கள் நித்தியானிகம் முதல் ச்ராத்தாதிகள் வரையிலும் ஒவ்வொரு ஒரு ப்ரகரணமாக எடுத்துக்கொண்டு அதற்கு அனுகூலமாக ஸ்மிருதி வாக்கியங்களை மேற்கோள் காட்டி நாம் சுலபமாக புரிந்து கொண்டு அனுஷ்டானம் செய்யும் வகையில் வர்ணாசிரம பேதங்களை அனுசரித்து இந்த நிபந்தன கிரந்தங்களை நம் முன்னோர்கள் தர்ம சாஸ்திர பண்டிதர்கள் உருவாக்கி கொடுத்து உள்ளார்கள்.

.....வளரும்

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# குறியும் நெறியும்

(ஸ்வாமீ பூர்ணானந்தர்)

எல்லாரும் இளமைப்பருவத்தில், "வாழ்க்கையை நன்றாக அநுபவிக்கவேண்டும்" என்று விரும்புகிறார்கள். விதவிதமான காட்சிகள், விதவிதமான உணவுவகைகள், விதவிதமான உடைகள், விதவிதமான ஆடம்பரப் பொருட்கள் என எல்லாவகையிலும் போகத்தை அனுபவிக்க ஆசைப்படுகிறார்கள். இன்றைய சூழலில் "பணம் இருந்தால் எதையும் அடையலாம்!" என நினைத்து, அதனால் பொருள் ஈட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு அதற்கேற்றவாறே வாழ்க்கைமுறையை அமைத்துக் கொள்கிறார்கள். நிறைய சிரமப்பட்டு நாளின் பெரும்பகுதியை வீணாக்கிப் பணம் சேர்ப்பதும், அநுபவிக்க அவற்றைச் செலவழிப்பதும் பெரும்பாலானோர் வழக்கமாக உள்ளது.

கணக்கிட்டுப் பார்த்தோமானால், வாழ்வின் மூன்றில் ஒருபகுதி உறக்கத்தில் போய்விடுகிறது. எஞ்சியுள்ளதில் பெரும்பகுதி குழந்தைப் பருவத்திலும் நோயிலும் முதுமையிலும் கழிந்து விடுகிறது. முழு ஆற்றலுடனும் அறிவுத் திறனோடும் செயல்பட கிடைக்கும் காலம் கொஞ்சமே. அதையும் அளவுக்கதிகமாகப் பணம் சேர்ப்பதிலும், உடல், மனம், புத்தியைக் கெடுக்கும் வீணான பொழுது போக்குகளிலும், போகங்களிலும் தொலைத்து விட்டால் எப்படி?

எனவே, செயல்படுமுன் சற்று சிந்திப்போம். மனித வாழ்க்கை? எதற்காக உண்பதும் உறங்குவதும் உடலைக் காப்பதும் காம நுகர்வுமாகக் கழிப்பதற்காகவா மனிதப் பிறவி ? மேலும், உங்களுக்கு மறுபிறவியில் நம்பிக்கை இருந்தால் கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியை புற இன்பங்களைத் தேடி வீணாக்கிவிடாதீர். ஏனெனில் அடுத்தது என்னவாயிருக்குமெனத் தெரியாது! நம்பிக்கை இல்லாவிட்டாலும் ஒரே பிறவிதான் என எண்ணினாலும் நீங்கள் இந்தப் பிறவியை வீணாக்கி விடாதீர். ஏனெனில் சரிசெய்து கொள்ள உங்கள் கருத்துப்படியே இன்னொரு பிறவி கிடையாது.

(தொடரும்)

நன்றி : வேதநெறி


வெப்: https://www.vedaneri.org/

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# வேத மந்திரங்களின் சிறப்புகள்

### க்ருஷ்ண யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதை (காண்டம் 1)
### (1.1.1 அனுவாகம் 1)



1-3. உத்வேகமும் மிகுந்த சக்தியையும் அடையும் பொருட்டு ஹே! வாயுதேவனே! உன்னை நான் அழைக்கிறேன். வாயு தேவனே! நீங்கள் ஜீவா சக்தியாக இருந்து மக்களின் நலனுக்காக இருக்கிறீர்கள்.

4. ஸவித்ரு தேவனானவன் உன்னைத் தலைசிறந்த செயல்கள் செய்ய ஊக்குவிக்கட்டும்.

5. யாராலும் வெல்ல முடியாதவனே ! ஆஹுதிகளில் தேவர்களின் பாகத்தை அதிகரிப்பாயாக. உன்னை ஆராதிப்பவன் எல்லா சக்தியையும், நேசத்தையும், சந்ததியையும் முழுமையாக அடைந்து, ஸகல விதமான துக்கங்களிலும், தலைகளிலிருந்தும் முழுமையாக விடுபட்டு, எந்தத் திருடனும், பகைவனும் உன்மேல் ஆதிக்கம் செலுத்த இயலாதவனாக ஆகுக. (இந்த மந்திரத்தை ஜெபிப்பதினால் உண்டாகும் நன்மை இங்கு குறிப்பிடப்படுகிறது).

6. ருத்திரனின் அம்பு (ருத்திரனின் சக்தி, தீக்ஷண்யம்) உன்னைச் சூழ்ந்து கொள்ளட்டும். அவை உன்னுடைய அறிவை தவறான பாதையில் செல்ல விடாமல் காப்பாற்றும்.

7. அறிவுச் சுடர்களான நீங்கள் புத்தி நாயகனின் வழியைப் பின்பற்றுவீர்களாக. அவை உங்களுக்கு வழி காட்டட்டும்.

8. யஜமானின் அறிவு காப்பாற்றப்படட்டும். ('பசு' என்ற சொல்லுக்கு வேதத்தில் இரு பொருள் உண்டு அவைகள் 1) 'பசு' என்னும் மிருகம்; 2) 'பசு' என்றால் அறிவு. இங்கு 'ஆத்ம ஞானம் பிரகாசிக்கட்டும்' என்று பொருள் கொள்ள வேண்டும்).

(தொடரும்….)

## தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

# சில உபநிஷத்துக்களின் சாரம்

## || ப்ரஹ்மோபநிஷத் ||

சாந்தி மத்திரம் : ஓம் குருசிஷ்யர்களாகிய எங்கள் இருவரையும் சேர்த்து பிரம்மம் எங்களைக் காப்பாற்றட்டும். எங்களை இருவரையும் சேர்த்துப் போஷிக்கட்டும். நாங்கள் இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் கூர்மையுள்ளதாகவும் பிரகாசமுள்ளதாகவும் ஆக வேண்டும். நாங்கள் ஒருபோதும் ஒருவரையொருவர் துவேஷிக்காமலிருக்க வேண்டும்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: — முவ்வகையிலும் சாந்தி நிலவுக !

1.  உடலில் உறையும் இந்த புருஷனுக்கு முக்கியமான இடங்கள் நான்கு ஆகும். அவை தொப்பூழ், இருதயம், கழுத்து, உச்சி என்று சொல்லப்படுகின்றன. இவற்றில் நான்கு பாதங்களை உடைய பிரம்மம் பிரகாசிக்கிறது. அவைகள் விழிப்பில் பிரம்மா, கனவில் விஷ்ணு, உறக்கத்தில் ருத்ரன், அதற்கப்பால் நாலாவது துரியத்தில் அக்ஷரப்ரஹ்மம் என்பது குறிப்பிடப்படுகிறது. அந்தப் பரமபுருஷனே சூரியனும், எங்கும் வியாபித்த விஷ்ணுவும், உலகையாளும் ஈசுவரனும் என்பதை நாம் அறிய வேண்டும். அவன் மனதில்லாமல் நினைப்பவனாகவும், காதில்லாமலேயே கேட்பவனாகவும், கை கால்களில்லாமல் செயல்புரிபவனாகவும், சுயஞ்ஜோதி ஸ்வரூபமாக உள்ளவன் என்று ஒப்புக் கொள்ளப்பட்டவனாவான்.

2. எங்கு உலகம் உலகமாக இல்லையோ, தேவர்கள் தேவர்களாக இல்லையோ, யக்ஞங்கள் யக்ஞங்களாக இல்லையோ, தாய் தாயாக இல்லையோ, தந்தை தந்தையாயில்லையோ, மருமகள் மருமகளாக இல்லையோ, சண்டாளன் சண்டாளனாக இல்லையோ, பிரதிலோம ஜாதியான பௌல்கஸன் பௌல்கஸனாக இல்லையோ, துறவி துறவியாக இல்லையோ, தவசி தவசியாக இல்லையோ, எல்லாம் ஒன்றேயான பரப்பிரம்மமாக விளங்குகிறதோ அதுவே நிர்வாணம் என்ற நிலை இங்கு நாம் அறிகிறோம்.

3. அங்கு தேவர்களோ, ருஷிகளோ, பித்ருக்களோ இல்லை. உலகங்களில் இருந்து நன்றாக உண்மையை உணர்ந்து விழித்துக் கொண்ட ஞானி வல்லமையுடன் அங்கு விளங்குகிறான். அவன் எல்லாமறிந்தவன் என்பது சத்தியம். (தொடரும்....)

# தர்ம ஸம்ரக்ஷணம்

(An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UII

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |